# THE JEWEL

**APR 16 to JUNE 2024**

*Bulletin of*

# LIONS CLUB OF SIVAKASI

**Vol : 11**





**Editor** : Lion Deepa Lakshmi Sudhakaran

**Address** : 641, Gnanagiri Road, Sivakasi.

**Phone** : 94875 91369

**Email** : editor.lionsclubofsivakasi@gmail.com




**Lion K.Prabakar**
*President*
98949 95884
president@lionsclubofsivakasi.com



**Lion P.Nithiyapandi**
*Secretary*
94431 69876
secretary@lionsclubofsivakasi.com



**Lion P.Sudhakaran**
*Treasurer*
94433 31369
treasurer@lionsclubofsivakasi.com

**Associate Editors 2023 - 24**



**Lion**
**MJF P.Vinoth Kanna**



**Lion**
**M.Raddhikadevi**



**Lion**
**S.Bhavani**



**Lion**
**Amirtha Priya**

## Slogan : Deserve, Fight for Right

## Theme : Touch the Heart by Service

# Lions Club of Sivakasi Surpassing 63rd Year 1961 - 2024

| | | |
|---|---|---|
| Multiple District | : | **324** |
| District | : | **324 A** |
| Region | : | **Raja Rajan** |
| Zone | : | **Vilvam** |
| Club No | : | **26504** |
| Inaugurated on | : | **09-05-1961** |
| Charterd on | : | **19-05-1961** |
| Total Members | : | **226** |
| Charter Member | : | **1** |
| MJFs & PMJFs | : | **30 & 3** |
| Meeting Days | : | I, II, IV Wednesday |
| Meeting Venue | : | Sivakasi Lions Junior School Palaniandavarpuram Colony, Sivakasi. |
| Permanent Project | : | **The Sivakasi Lions Mat.School, Sivakasi. The Sivakasi Lions International Institutions, Sivakasi. Bus Shelters, Children's Park, Blood Separation Unit, Blood Storage D.Freezer, ICU Ward & Washing Plant, Waiting Arena- Paver block laid in maternity ward waiting area, Washed clothes drying shed, Drinking water pipeline connection provision in 11 wards at Sivakasi G.H., Library and sewing machine centre in Burma Colony.** |

# Table of Contents


★ President Message 4

★ Secretary Message 6

★ Treasurer Message 13

★ Editor Message 14

★ International President Message 17

★ Multiple Council Chairperson Message 18

★ Governor Message 19

★ Lion PDG Dr.S.Rajendran Msg 21

★ 34th District Convention 22

★ Our Clubs Meetings 29

★ Cover Story 38

★ Office Bearers (2024 - 25) 39

★ Unveiling School Activities 45

★ Cherishing the moments of our members 53

# தலைவர் உரை



அன்புள்ள அரிமாக்களுக்கு,

வணக்கம். நமது பாரம்பரியம் மிக்க சங்கத்திற்கு 63-வது தலைவராக நானும் எனது team-ம் பதவியேற்று ஓராண்டு காலம் நிறைவு பெற்றுவிட்டது. நாட்கள் வேகமாக ஓடுகின்றன. இந்த ஓராண்டு காலத்தில் சங்கத்தை நல்ல முறையில் நடத்திச் செல்ல எங்களுக்கு உதவிய அனைத்து லயன்ஸ் நண்பர்களுக்கும், சேவைகள் செய்ய நாங்கள் கேட்ட போதெல்லாம் எங்களுக்கு வாரி வழங்கிய அனைத்து லயன்ஸ் நண்பர்களுக்கும், வேறு சங்க கூட்டங்களுக்கு, மண்டல மாநாட்டிற்கு, மாவட்ட கூட்டத்திற்கு எங்களுடன் இலணந்து வந்து சிறப்பிக்க செய்த அனைத்து உறுப்பினர்களுக்கும் எங்களது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

எந்த ஒரு பொறுப்பை எடுத்தாலும் அதை சிறப்பாக செய்து முடிப்பதை தவிர அந்தப் பொறுப்பில் இருக்கும் போது நாம் என்ன கற்றுக் கொண்டோம் என்பது மிகவும் முக்கியமான விஷயம். அந்த வகையில் இந்த ஒரு வருடத்தில் நான் என்ன கற்றுக் கொண்டேன் என்பதை பட்டியலிட முடியாத அளவிற்கு கற்றுக் கொண்டு உள்ளேன்.

மூன்றாவது தலைமுறையை கொண்டுள்ள பாரம்பரியம் மிக்க நமது சங்கம் ஒரு கோவில் போன்றது. அந்த கோவிலுக்கு பணி விடை செய்ய ஒரு வாய்ப்பு என்பது மிக உயரிய பதவியாகும். 80 வயதிலும் நமது சங்க உறுப்பினர்கள் இருக்கிறார்கள், 50 வயதிலும் நமது சங்க உறுப்பினர்கள் இருக்கிறார்கள், 30 வயதிலும் நமது சங்க உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இது போன்ற பல தரப்பட்ட வயதில் ஒரு சங்கம் இந்த உலகத்தில் இருக்குமா என்றால் அது சந்தேகம்தான். இப்படிப்பட்ட ஒரு சங்கத்தை நிர்வகிக்க எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்ததன் மூலம் பல நல்ல அனுபவங்களை கற்றுக் கொண்டேன். இந்த அனுபவம் கண்டிப்பாக எனது வாழ்க்கைக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மேலும் பல நல்ல நண்பர்கள் கிடைக்க ஒரு வாய்ப்பாக இருந்தது. இந்த சமுதாயத்திற்கு சர்வீஸ்

செய்யும் போது மனதிற்கு இதமாக இருந்தது. சர்விஸ் செய்யும் போது பலதரப்பட்ட மனிதர்களை பார்க்கிறோம், அவர்களை பார்க்கும் போது நமக்கு இறைவன் எவ்வளவு ஒரு அற்புதமான வாழ்க்கையை கொடுத்துள்ளார் என்று இறைவனுக்கு நன்றி சொல்ல தோன்றுகிறது. ஒரு வருடத்திற்கு முன்பு இருந்ததை விட தற்சமயம் எனது தலைமை பண்பு பன்மடங்கு உயர்ந்துள்ளது என்பதில் எந்த ஒரு சந்தேகமில்லை, அதை என்னால் உணர முடிகிறது. இப்படி நீண்ட பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

நமது அரிமா சங்கத்தில் பல இளம் அரிமாக்கள் உறுப்பினர்களாக சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். நமது சங்கத்தை நிர்வகிக்க ஒரு வாய்ப்பு கிடடத்தால் அதை தவற விட்டு விடாதீர்கள் என்பது எனது தாழ்மையான வேண்டுகோள்.

மேலும் இளம் உறுப்பினர்கள் அதிகமாக சேரும் இந்த நிலையில் நமது சங்க பாரம்பரியத்தை எழுத்து பூர்வமாக வடிவமைத்து கொடுத்தால் அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பது எனது தாழ்மையான கருத்து.

மீண்டும் ஒருமுறை எங்களுக்கு ஆதரவாக இருந்த அனைத்து Board Member-கள், முன்னாள் தலைவர்கள் மற்றும் லயன்ஸ் நண்பர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொண்டு, 2024-25 வருடத்தின் சங்க நிர்வாகிகளாக பதவி ஏற்கும் அனைத்து நண்பர்களுக்கும் எங்களது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி வணக்கம்!

**Scan QR Code for**

**Club Website**

Website :
**www.lionsclubofsivakasi.com**

Face Book ID :
**Lions Club of Sivakasi**

**Lion K.Prabakar**
*President*

# செயலாளர் அறிக்கை

*Lion P.Nithiyapandi*



அனைவருக்கும் வணக்கம்,

அன்பு லயன்ஸ் அனைவருக்கும் என் இனிய வணக்கம். 63 வருட பாரம்பரியமிக்க சிவகாசி லயன் சங்கத்தில் 2023-24ம் ஆண்டிற்கான, நீங்கள் செய்யும் சேவைகளை செய்ய வாய்ப்பளித்த, நம் முன்னாள் தலைவர்களுக்கும், PDG MJF A.வைரபிரகாசம், MJF லயன் மீரா வைரபிரகாசம் மற்றும் சங்க உறுப்பினர்களுக்கும் 2023-24ம் ஆண்டின் தலைவர் MJF லயன் K.பிரபாகர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தாண்டு மொத்தம் 808 சர்வீஸ் செய்துள்ளோம் என்பதில் பெருமை கொள்வோம். இந்த சாதனை உங்களுக்கே சொந்தம், மேலும் இந்த வருடம் மிகச்சிறப்பான வருடமாகவே இருந்தது. அது ஆபீஸ் பேரர்ஸ்சின் ஒற்றுமையே, அனைவரும் ஒன்றாக பயணித்ததால் இந்த வெற்றியை கொண்டாட முடிந்தது.

மேலும் இந்த வருடம் முதல் சர்வீஸ் நம் முன்னாள் தலைவர் லயன் M.ராமமூர்த்தி அவர்கள் ஆரம்பித்து வைத்து, அனைத்து சர்வீஸ்-க்கும் எங்களுடன் வந்ததால் இவ்வளவு சர்வீஸ் செய்ய முடிந்தது. சர்வீஸ் சேர்பெர்சன் லயன் T.இம்பாலா இதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தார். பல நபர்களுக்கு கண் ஆப்பரேஷன் செய்ய உதவினார்.

லயன் T.இம்பாலா மற்றும் லயன் S.N.N.சிவபிரான் அவர்கள் மிகப்பெரிய மெடிக்கல் கேம்ப் மற்றும் கேன்சர் அவார்னஸ் கேம்ப்பை மிகச் சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள். அதனால் பல மக்கள் பயனடைந்தார்கள். அன்று அங்கு வந்த அனைத்து கர்ப்பிணிப் பெண்களுக்கும் உணவு பரிமாறியது மனதுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

மாதம் தவறாமல் ஜீவக்கல் காப்பகம், வள்ளலார் இல்லம், சிபியோ உண்டு உறைவிடப் பள்ளிக்குத் தேவையான பலசரக்கு

பொருட்கள் வழங்கினோம். சிவகாசி சுகாதாரத்துறையுடன் இணைந்து, சிவகாசி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பள்ளிகளில் வளர் இளம் பருவத்தினருக்கான மருத்துவ முகாமை நடத்தினோம்.

நமது உறுப்பினர்கள் பலரும் சேர்ந்து தீபாவளியை ஜீவக்கல் காப்பகம் மற்றும் மாதா அமிர்தானந்தமயி முதியோர் இல்லத்தில் கொண்டாடினோம். சிவகாசி அரசு மருத்துவமனைக்கு பல சேவைகள் செய்த MJF லயன் A.P.செல்வராஜன் அவர்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த லயன் Dr.அய்யனார் அவர்களுக்கு மனம் நிறைந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் நேரம் தவறாமை எனக்கு பிடிக்கும் எங்கும் சரியான நேரத்தில், சொன்ன நேரத்தில் இருக்க வேண்டும் என்று எங்கு சென்றாலும் 5 நிமிடம் முன்னதாக நான் போனால் எனக்கு முன்னாள் தலைவர் காத்திருப்பார் அது எனக்கு ரொம்ப பிடித்திருந்தது. இதுபோக தலைவரின் நேர்மை இந்த வருடம் அவரிடம் நான் கற்றது. நம் நகர் ரதவீதியில் அண்ணன் ஆபீஸ் பேரிகார்டில் இருந்து 4 இடம் தள்ளி தான் ஒரு நாளும் ஒன்வேயில் வரமாட்டார் நான்கு ரத வீதி சுற்றிதான் வருவார். நன்றி அண்ணா, வண்டிக்கு நான்கு சக்கரம் (Office Bearers) அதை சரியாக இயக்கிய தலைவர் MJF லயன் K.பிரபாகர் அவர்களுக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் என்னுடன் பயணித்த பொருளாளர் லயன் P.சுதாகரன் நண்பர் சர்வீஸ் செய்வதற்கு வாரி வழங்கிய வள்ளல், முதலில் சர்வீஸ் செய்யுங்கள் கணக்கை பிறகு சொல்லுங்கள் என்று எங்களுடன் உறுதுணையாக இருந்த லயன் P.சுதாகரனும் துணை பொருளாளர் லயன் A.அருண்குமார் அவர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். மிக முக்கியமாக எனக்கு சர்வீசிலும் எழுத்து வேலைகளிலும் கம்பயூட்டர் வேலைகளிலும் எனக்கு உறுதுணையாக இருந்த என் துணைச் செயலாளர் கனம் பொருந்திய லயன் K.முரளிராஜ்

அவர்களுக்கும் மிகப்பெரிய நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்த ஆண்டும் நிறைய சர்வீஸ் செய்த லயன் A.P.செல்வராஜன் MJF, லயன் VID அமலானந்த் இவர்களை நான் நேரில் சந்தித்ததுகூட இல்லை ஆனால் சர்வீஸ் தொடர்ந்து செய்து கொண்டே இருக்கிறார்கள். எந்த புகழையும் எதிர்பாராமல் இந்த வருடம் முழுவதும் பசிக்கு உணவு அளித்த MJF லயன் S.வாசியப்பன், லயன் மணிமேகலை வாசியப்பன், லயன் ஹேமந்த், லயன் தீப்தாமதி (மேகலா பல் மருத்துவமனை) அவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது லயன்ஸ் நண்பர்கள் மனிதர்களுக்கு மட்டும் தினமும் உணவு அளிக்காமல் எங்கள் வீட்டிற்கு வரும் சிட்டுக்குருவிகளுக்கும் தினை உணவு அளிப்பது பறவைகளுக்கும், எங்களுக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

MJF லயன் P.வினோத் கண்ணா பல சேவைகள் செய்து, என்னை சிறப்பாக செயலாற்ற ஊக்கமளித்தார். சர்வீஸ் செய்து வந்தததும் எங்களை ஊக்கப்படுத்திய லயன் ஸ்டாலின், லயன் ராதிகாதேவி, லயன் முருகையன், லயன் ராமமூர்த்தி மற்றும் லயன் மீரா வைரபிரகாசம் அக்கா அவர்களுக்கும் நன்றி.

மேலும் புல்லட்டின் எடிட்டர் தீபா சுதாகரன், டெயில்டுஸ்டர் லயன் ரேனுகாதேவி முத்துக்குமரன். கிரிட்டர் கமிட்டி சேர்பெர்சன் லயன் தீபா அருண்குமார், புட் கமிட்டி சேர்பெர்சன் லயன் சிவசுப்பிரமணியன் அவர்களுக்கும், மேலும் இந்தாண்டு எங்களுக்கு உதவியாக இருந்த அனைவருக்கும் இந்தாண்டு மண்டல மாநாட்டுக்கு வந்து சிறப்பித்தவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

வருடம் முழுவதும் நமது சங்கத்திற்கு District Directory Book, Website ரெடி பண்ணி கொடுக்கும் லயன் S.R.ஸ்ரீதர் அண்ணாச்சி அவர்களுக்கும் நமது சங்க facebook ரெடி பண்ணிக்கொடுத்த லயன் விக்னேஷ்குமாருக்கும் நன்றிகளைத் தெரிவிப்போம்.

மேலும் என்னை சரியான நேரத்தில் சந்தோஷமாக சர்வீஸ் செய்ய அனுப்பிவிட்டு சரியான நேரத்தில் வீட்டிற்கு வராமல் நான் லேட்டாக வந்தால் கோபித்துக்கொண்டு மறுநாள் சரியான நேரத்திற்கு அனுப்பிய என் அன்பு மனைவி ஸ்ரீதேவி நித்தியபாண்டிக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏப்ரல் 20, 21 - 2024 அன்று நமது 324-A மாவட்டத்தின் 34-வது மாவட்ட மாநாடு கன்னியாகுமரி, விஸ்வா கிராண்ட் ஹோட்டலில் வைத்து மிகச்சிறப்பாக நடைபெற்றது.

நமது சங்கம் சார்பாக ஆளுநர் தேர்வு, முதலாம் துணை நிலை ஆளுநர் தேர்வு இரண்டாம் துணைநிலை ஆளுநர் தேர்வுக்கு வாக்களித்து, நம் மாவட்ட வருங்கால ஆளுநர்களை தேர்வு செய்தோம். மாநாட்டில் நாம், ஒரு ஊனமுற்ற நபருக்கு Wheel Chair வழங்கினோம்.

28.4.2024 அன்று, சாயர் மண்டல மாநாடு SVPS மஹாலில், சாயர்புரத்தில் வைத்து நடைபெற்றது. நமது சங்கம் சார்பாக ஏழு உறுப்பினர்கள் கலந்து கொண்டோம்.

24.4.2024 அன்று ஏப்ரல் மாதத்தின் இரண்டாவது பொதுக்குழுக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. சிறப்பு விருந்தினர் திரு.Dr.P.K.பாலமுருகன் M.B.A., M.Phil., Ph.D., MLM, PGDRM (தலைமை ஆசிரியர், ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி, சிவகாசி) அவர்கள் "How to Inspire, Shape and Mould your children" பற்றி சிறப்புரை வழங்கினார்.

01.05.2024 அன்று மே மாதத்தின் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. 15.05.2024 அன்று மே மாதத்தின் முதல் பொதுக்குழுக் கூட்டத்தில் சிறப்பு விருத்தினராக லயன் Y.வெற்றிச்செல்வன் PMJF (Second Vice District Governor-Elect) அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்

19.05.2024 அன்று நமது சீனியர் பள்ளி வளாகத்தில் International பள்ளி ஆசிரியைக்கு தங்குவதற்கான, நான்கு அறைகள் கிரகப்பிரவேசம் தலைவர் லயன் K.பிரபாகர் மற்றும்

பள்ளி தாளாளர் லயன் J.ரமேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது.

22.05.2024 அன்று மே மாதத்தின் இரண்டாவது பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. நமது சங்கத்தில் உள்ள மூன்று DC-கள் கௌரவிக்கப்பட்டார்கள். நமது உறுப்பினர்களின் குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகள் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினார்கள்.

26-05-2024 அன்று நமது இன்டர்நேஷனல் பள்ளியின் கிரகப்பிரவேசம் நடைபெற்றது.

05.06.2024 அன்று ஜுன் மாதத்தின் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது.

12.06.2024 அன்று நடைபெற்ற கூட்டம் தலைவர், பொருளாளர் மற்றும் attendance Committee Chairperson லயன் K.முரளிராஜ் அவர்களின் thanks giving gatering -ஆக நடை பெற்றது.

## சேவைகள்

17.04.2024 அன்று சிவகாசி லயன்ஸ் சீனியர் பள்ளியின் பஸ் டிரைவர் மற்றும் கண்டெக்டர்களுக்கு நம் நகர் அரசு மருத்துவமனையில் வைத்து மருத்துவ பரிசோதனை நடைபெற்றது,

26.04.2024 அன்று சிவகாசி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவத்திற்கு தேவையான கம்ப்யூட்டரை முன்னாள் தலைவர் MJF லயன் A.P. செல்வராஜன் வழங்கினார்.

19.4.2024 அன்று திரு.K.P.கண்ணன் என்பவரிடமிருந்து கண்தானம் பெறப்பட்டது. பசிக்கு உணவு திட்டத்தின் கீழ் தினமும் 10 நபர்களுக்கு மேல் மதிய உணவு வழங்கப்பட்டது. இதற்கு நன்கொடை வழங்கியவர்கள், நமது முன்னாள் தலைவர்கள் MJF லயன் வாசியப்பன், MJF லயன் P.வினோத் கண்ணா.

03.05.2024 அன்று விஜயலட்சுமி என்ற பெண்ணிற்கு நவீன் கண் மருத்துவமனையில் வைத்து கண் புரை அறுவை சிகிச்சை செய்ய தலைவர் லயன் K.பிரபாகர், லயன் ஷகிலா பிரபாகர் மருத்துவ உதவித்தொகை வழங்கினார்கள்.

03.05.2024 அன்று ஜீவக்கல் காப்பகத்திற்கு, தேவையான ஒரு மாதப் பலசரக்கு பொருட்கள் வழங்கிணோம்.

18.05.2024 அன்று லயன் செந்தில் வேலவன் மற்றும் லயன் கோதை செந்தில் வேலவன் வள்ளளார் இல்லத்திற்கு தேவையான பலசரக்கு மற்றும் காய்கறிகளை வழங்கினார்கள்.

21.05.2024 அன்று லயன் சுதிர் ஒரு யூனிட் இரத்தம் தானம் செய்தார். 23-05-2024 அன்று நமது சங்கத்தின் முன்னாள் தலைவர் MJF லயன் A.P.செல்வராஜன் அவர்கள் சிவகாசி அரசு மருத்துவமனையில் உள்ள பல் மருத்துவ பிரிவிற்கு தேவையான மருத்துவ உபகரணங்களை வழங்கினார்.

நன்றி வணக்கம், வாழ்க வளமுடன்...




நமது சிவகாசி லயன்ஸ் இன்டர்நேஷனல் பள்ளிக்கு இரண்டு புதிய பேருந்துகள் வாங்கினோம்.

# Our prestigious permanent projects






**The Sivakasi Lions International Institutions**






**Drinking water pipeline connection provision in 11 wards in GH**






**Washed clothes drying shed in GH**

**Waiting Arena- Paver block laid in maternity ward waiting area in GH**

# பொருளாளர் அறிக்கை

*Lion P.Sudhakaran*



அனைவருக்கும் வணக்கம்

இந்த வெற்றிகரமான ஆண்டை முடிக்கும் போது இந்த மதிப்புமிக்க பதவியை என்னிடம் அளித்த தலைவர் MJF லயன் K.பிரபாகர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்கள் வழிகாட்டுதலும், தலைமைத்துவமும் என்னை ஊக்கப்படுத்தி என் பணி சிறக்க உதவியது.

செயலாளர் லயன் P. நித்திய பாண்டி, துணை செயலாளர் லயன் K.முரளிராஜ், துணை பொருளாளர் லயன் A.அருண்குமார் இவர்களின் உறுதியான ஆதரவிற்கும் ஒத்துழைப்பிற்கும் நன்றிகளைக் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நமது உறுப்பினர்கள் அனைவரும் சந்தா தொகையை குறித்த காலத்திற்குள் வழங்கியதற்காகவும், சேவைகளுக்காக நன்கொடை அளித்ததற்கும், சிறப்பு அங்கீகாரத்தையும், பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நமது சங்க இதழுக்கு தங்கள் விளம்பரங்கள் மூலம் உறுதுணையாக இருந்த நமது உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர் அல்லாதவர்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்களின் பங்களிப்பு இதழைத் தயாரிப்பதில் உதவியது. உங்கள் மதிப்புமிக்க ஆதரவிற்கு நன்றி. இந்த வெற்றிகரமான ஒத்துழைப்பை எதிர்காலத்திலும் தொடர எதிர்பார்க்கின்றோம்...

அன்பான வாழ்த்துக்களுடன்...

# இதழாசிரியர் பக்கம்

*Lion Deepa Lakshmi Sudhakaran*



அன்பு லயன் உறுப்பினர்களே,

நமது பாரம்பரியமிக்க சிவகாசி லயன்ஸ் சங்கத்தின் "THE JEWEL" மாத இதழின், இதழாசிரியராக ஒரு வருடம் பணியாற்றியது எனது பெருமை மற்றும் பாக்கியமாகும்.

இதழின் ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பை கொடுத்த தலைவர் MJF லயன் K.பிரபாகர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள். உங்களின் ஆதரவும் வழிகாட்டுதலும் இதழை புதுமையாக வடிவமைக்க உதவியது.

நான் பதவியேற்கும் முன் PDG MJF லயன் A.வைரப்பிரகாசம் மற்றும் MJF லயன் மீரா வைரப்பிரகாசம் அவர்களிடம் ஆசீர்வாதம் வாங்க சென்ற போது இருவரும் என் பணியை சிறப்பாகச் செய்ய ஊக்கப்படுத்தினார்கள், மேலும் மீரா அம்மா மாதம் தவறாமல் இதழை படித்து எனக்கு பல ஆலோசனைகளையும், வாழ்த்துக்களையும் வழங்கினார்கள். அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நமது தலைவர் மற்றும் மீரா அம்மா என் திறமையில் கொண்ட நம்பிக்கை இதழின் வெற்றிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்தது.

இதழைப் படித்து தங்களது எண்ணங்களையும், கருத்துக்களையும் வழங்கிய மூத்த உறுப்பினர் லயன் M.ராமமூர்த்தி மற்றும் அனைத்து உறுப்பினர்களுக்கும். சங்கத்தின் நிகழ்வுகள், கூட்டங்கள் பற்றி கட்டுரைகள் வழங்கிய உறுப்பினர்களுக்கும் சிறப்பு நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நமது சங்கத்தின் செயல்பாடுகள் மற்றும் சேவைகளை எதிரொலிக்கும் உள்ளடக்கத்தை சிறப்பாக உருவாக்க திரைக்கு பின்னால் எனக்கு உந்து சக்தியாக இருந்த இணை ஆசிரியர்கள் MJF லயன் P.வினோத்கண்ணா, லயன் ராதிகாதேவி

முருகையன், லயன் பவானி சுதிர் மற்றும் லயன் அமிர்தபிரியா முரளிராஜ் அவர்களுக்கும் சிறப்பு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எல்லா இதழ்களையும் தவறாமல் ரசித்துப்படித்து வாழ்த்துரை அனுப்பிய PDG லயன் Dr.S.ராஜேந்திரன் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள் பல தெரிவித்துக் கொள்கின்றேன்.

செயலாளர் லயன் P. நித்திய பாண்டி, துணை செயலாளர் லயன் K.முரளிராஜ், பொருளாளர் லயன் P.சுதாகரன், துணை பொருளாளர் லயன் A.அருண்குமாரும் Ist V.P.லயன் சுதிர் அவர்களும் சரியான நேரத்தில் எனக்கு சங்கத்தின் செயல்பாடுகள், சேவைகள் பற்றிய விவரங்களும் மற்றும் புகைப்படங்களை வழங்கினார்கள்.

லயன் S.R.ஸ்ரீதர் அவர்கள் இதழின் அட்டைப்படங்களை புதுமையாக வடிவமைத்துக் கொடுத்தார்கள். லயன் T.இம்பாலா அவர்கள் சரியான நேரத்தில் புத்தகங்களை வெளியிட அச்சிட்டுக் கொடுத்தார்கள் அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். புத்தகத்திற்கு வேகமாகவும், பொறுமையாகவும் டைப்செட்டிங் செய்து கொடுத்த V.விஜயராணி (திருமுருகன் கம்ப்யூட்டர்ஸ்) அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சென்ற பத்து இதழ்களின் பக்கங்கள் மூலம் நமது சங்கத்தின் சாதனைகளையும், உறுப்பினர்களின் சாதனைகளையும், சேவைகளின் எழுச்சியூட்டும் கதைகளை அங்கீகரித்து கொண்டாடினோம். பன்னாட்டு, கூட்டு மாவட்டம், நமது மாவட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் சேவைகளைப் பகிர்ந்தோம்.

எவ்வாறாயினும் எந்தவொரு உறுப்பினர்களின் பெயர் அல்லது அவர்களின் மதிப்புமிக்க சேவைகளும், பங்களிப்புகளும் கவனிக்கப்படாமலோ அல்லது குறிப்பிடப்படாமலோ விடுபட்டிருந்தால் நான் மனப்பூர்வமாக மன்னிப்பு கேட்டுக் கொள்கின்றேன். அத்தகைய மேற்பார்வை முற்றிலும் நோக்கமற்றது.

நமது இதழின் அடுத்த இதழாசிரியர் லயன் S.குமரவேல்கனி அவர்களின் தலைமையில் நமது வெளியீடு தொடர்ந்து நமது பாரம்பரியத்தை முன்னெடுத்துச் சென்று நமது சமூகத்தை ஊக்குவிக்க வாழ்த்துக்கள்.

இறுதியாக உங்கள் இதழாசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பிற்கு நன்றி, இந்தப் பொறுப்பு எனக்கு மிகவும் கௌரவமாக இருந்தது. மேலும் மகிழ்ச்சியையும், விலைமதிப்பற்ற அனுபவத்தையும் வழங்கியது. எனது கணவரும் பொருளாளருமான லயன் P.சுதாகரன் மற்றும் எனது பிள்ளைகள் S.பிரகதிஸ்வரன், S.பிரசாலினி இவர்களின் ஊக்கம் எனக்கு மிகப்பெரிய பலமாக இருந்தது.

நன்றி... வணக்கம்

---

## IN MEMORIAM : A TRIBUTE TO
# LION P.C.BALAKRISHNAN




It is with heavy hearts that we share the news of the passing of our esteemed senior member Lion P.C.Balakrishnan on 16-06-2024. He was a dedicated and cherished member of our club.

# International President's Message

## *Strength in Diversity*

Dear Lion,

As we prepare to transition to the next Lion year, I've been taking time to reflect upon this incredible year and on all the meaningful encounters I've had with many of you during my travels. It's been deeply rewarding to experience firsthand one of our Association's greatest strengths - the diversity of our membership and our service.




For more than 100 years, Lions have opened their arms to the world and embraced new people, projects and ideas. From providing nutritious meals to those who are hungry and championing environmental conservation efforts, to extending warmth and support to displaced individuals and so much more, our commitment knows no bounds. We identify the needs and develop solutions to meet these challenges.

As Lions, we refuse to settle for the status quo. Instead, we continually innovate to address the ever-evolving needs of our communities. Let's continue to find new ways to support the people who need us. Let's continue inviting all people who want to join us in service. Let's continue improving communities and changing lives, at home and around the world.

We Serve.

Yours in service,

*Dr. Patti Hill*

# Multiple Council Chairperson Message

PMJF லயன் **K.முத்தையா**

(Multiple Council Chairperson)



லயன் சகோதரி தீபலட்சுமி சுதாகரன் THE JEWEL, இதழ் ஆசிரியருக்கு வணக்கங்கள்,

இந்த ஆண்டு முழுவதும் சங்க இதழை சிறப்பாக வடிவமைத்து வழங்கி இருக்கின்றீர்கள். உங்களுடைய சங்க இதழ் மாவட்ட இதழுக்கு இணையாக மிகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்லாமல் அதிகப்படியான விளம்பரங்களைப் பெற்று இந்த இதழை நீங்கள் வெளியிட்டு இருக்கின்றீர்கள். சங்கம் பற்றி, உங்கள் மாவட்டம் பற்றி, கூட்டு மாவட்டம் பற்றி, பன்னாட்டு இயக்கம் பற்றி பல தகவல்களை வழங்கியிருக்கின்றீர்கள், அதேபோல் பலருக்கும். வாய்ப்பு அளித்திருக்கின்றீர்கள்.

புதிய பள்ளி கட்டிடம் வெகுவாக வளர்ந்து இருப்பது கண்டு மனம் மகிழ்கின்றேன். உங்கள் பணி தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

---

## TOP 10 DISTRICTS IN INDIA

As of May 31, 2024

**New Clubs**

| District | New Clubs |
|---|---|
| 320D & 3234H2 | 25 |
| 3232B3 | 18 |
| 317G, 3232B2 & 3233G1 | 17 |
| 3233E1 & 324F | 16 |
| 324J | 15 |
| 318C, 318E, 320G, 321E & 322C3 | 14 |

**New Members**

| District | New Members in Existing Clubs |
|---|---|
| 324F | 1,532 |
| 318D | 843 |
| 320D | 779 |
| 324E | 718 |
| 324J | 646 |
| 322G | 642 |
| 317D | 610 |
| 321D | 588 |
| 318C | 539 |
| 318E | 518 |

**Net Growth**

| District | Net Growth |
|---|---|
| 324F | 1,294 |
| 320D | 885 |
| 318D | 679 |
| 3234H2 | 635 |
| 322C3 | 599 |
| 3233G1 | 583 |
| 318C | 555 |
| 324C | 525 |
| 320G | 521 |
| 322G | 507 |

# Governor's Message

**Lion. Dr.D.பிரான்சிஸ் ரவி** MJF
மாவட்ட ஆளுநர் 2023-24.

மாவட்டத்துக்கு பெருமை சேர்க்கும் சிவகாசி லயன்ஸ் சங்கத்தின் செயல்கள் மனதிற்கு மகிழ்ச்சி கொடுக்கிறது.




ஒவ்வொரு ஆண்டிலும் மாவட்ட சங்கங்கள் இணைந்து செய்யும் சேவைகளை நீங்கள் ஒரே சங்கம் செய்து சாதனை படைத்து வருகிறீர்கள். அதிலும் இந்த ஆண்டில் நீங்கள் ஒரு சங்கமாக 16 கோடி அளவில் ஒரு உலக தரத்தில் ஒரு லயன்ஸ் பள்ளியை தொடங்கி சாதனை படைத்தது எனக்கும் பெருமை. மாதம் தவறாமல் "THE JEWEL" சங்க இதழை வெளியிட்டதற்கு பாராட்டுகள் இன்னும் பல சேவைகள் செய்திட வாழ்த்துக்கள்...

இந்த லயன்ஸ் ஆண்டு 2023-24-யில் அத்தனை செயல்களும் மாவட்ட வளர்ச்சி, உறுப்பினர் முன்னேற்றம் என்ற திட்டத்தோடு கொண்டு சென்றோம். ஒவ்வொரு உறுப்பினரும் முன்னேற்றம் அடைய பல திட்டங்கள், பயிற்சி வழங்கினோம். ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒரு மாற்றங்களோடு செயல் படுத்தினோம்.

தலைமை பண்புக்கு முன்னுரிமை என செயல்பட்டோம். இணைந்து ஒரு தொழில் செய்ய ஆலோசனைகள் கொடுத்தோம். சேவைகள், மாற்று திறனாளிகளுக்கு உபகரணம் வழங்கி மன நிறைவு கண்டோம்.

LCIF மூலம் 10,000 USD பெற்று மழை வெள்ள பாதிப்பில் சிறந்த சேவைகள் செய்தோம். 12 புதிய சங்கங்கள் இந்த ஆண்டில் மண்டல, வட்டார தலைவர்களுக்கு மலேஷியாவில்

பயிற்சி... மூணாரில் 628 நபர்கள் பதிவோடு முத்தலைவர்கள் பயிற்சி... 90 சங்கங்களில் ஆளுநர் வருகை நிகழ்ச்சி.

9 மண்டல அளவில் தலைமை பண்பு பயிற்சி.. உறுப்பினர் பெருக்கத்துக்கு முக்கியத்துவம் வழங்குகிறோம். MJF-கள் கூடுகை, பட்டய தலைவர்களை கௌரவித்தல், மும்பை GIVE Conclave நிகழ்ச்சியில் பலர் கலந்து சிறப்பு. இப்படி பல தீபாவளி, கிறிஸ்துமஸ், பொங்கல் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது.

ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பதிவு கட்டணங்கள் குறைக்க பட்டது. இப்படி அனைத்து நிகழ்ச்சிகளும் பார்த்து பார்த்து ஏற்பாடு செய்யப்பட்டது.

குடும்பம் குடும்பமாக சுற்றுலா சென்று வந்தோம். இன்னும் செல்வோம். ஆண்டு முழுவதும் யாரையும் எதற்காகவும் சிரமம் கொடுக்காமல் மகிழ்ச்சியாக கொண்டு சென்று அனைத்தும் சிறப்பாகவே கொண்டு சென்றோம்..

என்னில் நீங்கள் உங்களில் நான்



# வாழ்த்து பகுதி



இதயம் நிறை அன்பு கொண்ட இதழாசிரியர் லயன்.தீபலட்சுமி சுதாகரன் அவர்களுக்கு நாகர்கோவில் பிடிஜி லயன் டாக்டர் எஸ்.ஆர்-ன் வணக்கம்.

தடைகள் இருந்தால் தகர்த்து விட்டுதான் செல்ல வேண்டுமென்றில்லை தவிர்த்து விட்டும் செல்லலாம் எனும் தங்கள் தலையங்கம் மகுடம்.

International Director-ஐயும் சங்கத்திற்கு வர வைத்து, சங்க செயல்பாடுகளை காண வைத்துள்ளீர்கள் நல்ல செயல் இது. அதனை லயன் சரண்யா வினோத்கன்னா வாயிலாக நிகழ்வு புகைப்படங்களுடன் படிப்பவர்கள், நிகழ்வில் உடன் இருந்தது போன்ற உணர்வினை ஏற்படுத்தியுள்ளார். அவ்வண்ணமே Gov-யும், லயன் மணிமேகலை வாசியப்பன் மூலமாக...

Cover Story இதயத்தில் ஒத்திக்கொள்ளும் படியானது School activities வழக்கம் போல் அருமையானது. பிறந்த நாள், மண நாள் லயன்ஸ்களை உங்களோடு நானும் மனங்குளிர வாழ்த்துகின்றேன். Birthday puzzle super, Top 10 Districts in India அனைவரும் தெரிந்திருக்க வேண்டியது.

Lions club of Baroda நற்செய்தி. Lions Learn & Leader Dog இன்னொரு நற்செய்தி. Lion 3rd VP AP Singh அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய தகவல்.

International president message, மாவட்ட செய்திகள் Mission 1.5 என செய்திகளின் தொகுப்பு பாராட்டிற்கினியது. முத்தான முத்தலைவர்களின் பக்கங்கள் தொடர்ந்து சிறப்பு. உங்கள் கைவண்ணம் உங்கள் 10வது இதழ் பத்திரை மாத்து தங்கம்.

*வாழ்த்துவது வாயல்ல இதயம்*

Lion PDG.Dr.S.Rajendran.MBBS., D.Lit., (for Social Service),
நாகர்கோவில்

# 34–வது மாவட்ட மாநாடு

லயன் **M.ராமமூர்த்தி**



நமது லயன்ஸ் 324-A மாவட்டத்தின் 34வது வருடாந்திர மாவட்ட மாநாடு கூட்டம் 20-04-2024 & 21-04-2024 சனி - ஞாயிறு கன்னியாகுமரியின் சுப்ரமணியபுரத்தில் உள்ள S.V.P.S.மஹாலில் வைத்து 5430 அருமையான லயன்ஸ் உறுப்பினர்களையும், 176 லயன்ஸ் சங்கங்களையும், 36 முன்னாள் லயன்ஸ் ஆளுநர்களையும் கொண்டுள்ள நமது 324-A மாவட்டத்தின் 34வது வருடாந்திர கூட்டம் மேற்படி நடந்திட இந்த லயன்ஸ் ஆண்டின் DESERVE, FIGHT FOR RIGHT & TOUCH THE HEART BY SERVICE என்ற அற்புதமான சாதனைகள் புரிந்திடும். நமது மாவட்ட ஆளுநர் MJF லயன் Dr.D.FRANCIS RAVI அவர்களால் பரிபூரண முறைப்பாடுகளுடன் ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

"UNITE & SERVE" என்ற தாரக மந்திரத்தின் வழிகாட்டுதலாகக் கொண்டு கடந்த 63 ஆண்டுகளாக இமயப்புகழ் இறைசேவைகளுடனான, 226 லயன்ஸ் உறுப்பினர்களை கொண்டுள்ள நமது லயன்ஸ் சங்கத்தின் 40 உறுப்பினர்களின் பதிவுகளை இக்கூட்டத்திற்கு வழங்கி சுமார் 24 லயன்ஸ் இக் கூட்டத்தில் கலந்து சிறப்பித்தோம்.

20.4.2024 சனிக்கிழமை காலை சரியாக 9.30 மணிக்கு நமது லயன்ஸ்களின் 1030பதிவுகளுடன் முக்கிய விருந்தினர்கள் மேடைக்கு அழைக்கப்பட்டார். நமது ஆளுநர் Lion Dr.D.FRANCIS RAVI, MIF 9.40 மணியில் கூட்டத்தினை துவங்கி வைத்தார். LIONS INTERNATIONAL Objects-ஐ நமது லயன்ஸ் சங்கத் தலைவர் Lion K.பிரபாகர் அருமையாக வாசித்தளித்திட்டார். வரவேற்புரை அமைப்புக்குழு தலைவர் லயன் S.நல்ல சிவம்பிள்ளை MJF வழங்கினார். கூட்டத்தின்

துவக்க உரை நமது மாவட்ட ஆளுநர் அவர்களால் சிறப்பாக அருளப்பட்டது. சங்கங்களின் பதாகை அணிவகுப்பு நடந்தேறியது. நமது சிவகாசி லயன்ஸ் சங்கத்தின் பதாகை சமர்ப்பிக்கப்படும்போது, அமைச்சரவை செயலாளர் அவர்கள் நமது சிவகாசி லயன்ஸ் சங்கத்தின் இந்த லயன்ஸ் ஆண்டின் சேவைகள் சாதனையான ரூ.15 கோடியிலான புதிய பள்ளி + 1.4 கோடி மதிப்பிலான சங்கத்தின் இறைநிலை சேவைகளை அற்புதமாக எடுத்துக்கூறினார். நமது மாவட்டத்தின் 160 சங்கங்களிலிருந்து 1030 நபர்கள் பதிவு செய்து சுமார் 1200 நபாகள் மொத்தத்தில் கலந்து கொண்டார்கள்.

முதன்மை விருந்தினராக International Director Endorsee PMJF.PDG.LION S.MAHESH (காஞ்சிபுரம்) அவர்கள் வருகை தந்து, நமது லயன்ஸ் மாவட்டத்தையும், நமது லயன்ஸ் சங்கங்களையும் வெகுவாகப் பாராட்டி, லயன்ஸ்களான நமக்கு உள்ள புதிய உறுப்பினர்கள் சேர்ப்பு, அன்றாட சேவை திட்டங்கள் பொறுப்புக்களை விவரித்தளித் திட்டார்கள்.

Guests of Honours ஆகக் கலந்து சிறப்பித்த CABINET ADVISOR PDG LION J.K.R.MURUGAN, MJF CABINET ADVISOR PDG. LION P.JUSTIN PAUL, MJF 324-A GAT LEADER PDG. H.MOHAMED ALI, PMJF மூவரும் சிறப்புரை வழங்கினார்கள்.

IPDG. Passion Lion Dr.N.K.விஸ்வநாதன் PMJF முதல் துணை ஆளுநர் Lion Dr.P.அய்யாத்துரை PMJF இரண்டாம் துணை ஆளுநர் Lion Dr.H.சாஜஹான் PMJF கலந்து சிறப்பித்தது ஏனைய முன்னாள் ஆளுநர்கள் அனைவரும் வாழ்த்துரை தந்திட்டார்கள்.

GMT Coordinator Lion S.குமார் PMJF நன்றியுரை வழங்கிட Inagural session முடித்து வைக்கப்பட்டது.

FIRST PLENARY SESSION சரியாக 12.20 மணியளவில் முதலாம் துணை ஆளுநர் Lion Dr.P.அய்யாதுரை, PMJF வரவேற்புரையுடன் துவங்கியது. துவக்க குறிப்புக்கள் நமது

லயன்ஸ் மாவட்ட கவர்னர் Lion Dr.D.FRANCIS RAVI, MJF தந்திட்டார். அமைச்சரவை செயலாளர் லயன் S.A.சுப்பையா கூட்டத்திற்கான QUORUM-த்தினை சரியாக உள்ளதெனக் கூறினார். அவரே அடுத்து DISTRICT ADMINISTRATION REPORT-ஐ வாசித்தளித்து சமர்ப்பித்திட்டார். 2022- 2023ம் லயன்ஸ் ஆண்டிற்கான Audited Accounts Statement-ஐ உடனடி முன்னாள் ஆளுநர் IPDG Lion Dr.N.K.விஸ்வநாதன் PMJF சமர்ப்பித்திட்டார் அதை அவையினரால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அடுத்தடுத்து
1. Credential Committee Report by Governor
2. Nominating Committee Report by
   PDG Lion T.சுயம்புராஜன் MJF
3. Election Committee Report by
   PDG Lion H.முகம்மது அலி PMJF
4. Rules of Procedure Committee Report by
   PDG Lion M.A. சுந்தர்ராஜன் MJF
5. Parliamentary Procedure Committee Report by
   PDG Lion V. ஜெகன்னாதன் MJF
6. Constitution & Bylaw's Committee Report by
   PDG. Lion P.ஜஸ்டின் பால் MJF
7. Resolution Committee Report by PDG. Lion J.K.R.முருகன் MJF
8. Program Committee Report by PDG. Lion P.ஆறுமுகசாமி MJF
9. Public Relation Committee Report by Lion R.முனியாண்டி
10. Necrology Committee Report by
   Lion Dr.H.Rajidap Neshtar MJF
11. Entertainment Committee Report by
   Lion Dr.H.Shajahan PMJF, II VDG

வழங்கப்பட்டு அவையினரால் ஏகமனதாய் ஏற்றுக் கொள்ளப்பட்டது. கூட்டம் மதிய உணவிற்காக ஒத்தி வைக்கப்பட்டது.

சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு மீண்டும் கூட்டம் துவங்கி, முதலில் NECROLOGY CEREMONY அதாவது இந்த லயன்ஸ் ஆண்டில், நம்மைவிட்டு நிரந்தரமாகப்பிரிந்து, இறைவன் திருவடி நிழலில் அமைதியுற்றிருக்கும் 32 தெயவத்திருவாளர்கள் லயன்ஸ்களுக்கு, அவரவர்களின் சிறப்பியல்புகளை எடுத்துக்கூறி நம்மனைவரின் இதய அஞ்சலி செலுத்தப்பட்டது.

இரவு 7.00 மணிக்கு ENTERTAINMENT PROGRAMMES PDG Lion V.ஜெகன்னாதன் அவர்களால் சுமார் 2.00 மணி நேரம், பெரும்பாலோர் கலந்து கொண்டு, அனைவரும் மகிழ்ந்திருக்கும்படியாகச் செய்திட்டார்கள். மாவட்ட மாநாட்டின் முதல் நாள் கூட்டம் இரவு 8.30 மணியில் இரவு விருந்துக்குப் பின் நிறைவுற்றது.

இரண்டாம் நாளாக கூட்டம் 21.04.2024 ஞாயிற்றுக்கிழமை, காலை சிற்றுண்டிக்குப் பின்னர், 9.00 மணிக்கு இரண்டாம் PLENARY SESSION துவங்கியது. மாவட்ட ஆளுநர் Lion Dr.D.பிரான்சிஸ் ரவி MJF முறைப்படி கூட்டத்தினை துவக்கி வைத்து, வரவேற்புரை தந்திட்டார். அவர் Credential Committee தலைவராக அந்த அறிக்கையும் சமர்ப்பித்திட்டார். 418 நபாகள் வாக்களிக்க Credential பெற்றுள்ளனர் என்றார். அதன் பின்னர் மேடையை தேர்தல் குழு தலைவர் PDG லயன் H.முகம்மது அலி PMJF வசம் ஒப்படைத்தார். தேர்தல் பணிக் குழுவில், நமது சிவகாசி லயன்ஸ் சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் லயன் M.ராமமூர்ததி, லயன் D.பிரபாகர், PMJF இடம் பெற்றிருந்தனர்.

ஆளுநர் தேர்வுக்கு போட்டியிடும் முதலாம் துணை ஆளுநர் லயன் P.அய்யாத்துரை PMJF முதலாம் துணை ஆளுநர் தேர்வுக்கு போட்டியிடும் இரண்டாம் துணை ஆளுநர் லயன் H.சாஜஹான் PMJF இரண்டாம் துணை ஆளுநர் தேர்வுகள் போட்டியிடும் மார்தாண்டம் ப்ரைடு லயன்ஸ் சங்க உறுப்பினர் லயன் Y.வெற்றிச்செல்வன் MJF தூத்துக்குடி லயன்ஸ்

சங்க உறுப்பினர் லயன் N.கலுசுலிங்கம் MJF ஆகிய நால்வரையும் அவரவர்களின் பிரதிநிதிகள் தலா 10 நிமிடங்கள் அவைக்கு அறிமுகம் செய்விக்கப்பட்டனர். பின்னர் ஓட்டுப்போடும் பணி துவங்கியது. நமது மாவட்ட லயன்ஸ்கள் 418 பேர். ஒவ்வொருவரும் மும்மூன்று வாக்குகள் அளித்து சிறப்பித்தனர். மதிய உணவிற்குப் பின்னர் ஓட்டு எண்ணிக்கை பணி துவங்கியது.

பதிவான 418 வாக்குகளில்

1. Governor (E) Lion P.Ayyadurai - 358 வாக்குகளும்

2. First Vice District Governor (E) Lion H.Shajahan - 365 வாக்குகளும்

3. Second vice District Governor (E) Lion Y. Vetri Selvan - 384 வாக்குகளும் பெற்று வெற்றி பெற்றுள்ளதாக மாவட்ட ஆளுநர் அறிவித்திட்டார். வெற்றி பெற்றுள்ள DG Team (Elect for 2024 - 2025) மூவரையும் நமது ஆளுநர் அவர்கள் கௌரவித்திட்டார்கள். வெற்றி பெற்ற மூவரும் ஏற்புரை வழங்கி சிறப்பித்தார்கள்.

அமைச்சரவை பொருளாளர் Lion B.ராஜ்குமார், MJF நன்றியுரை வழங்கிட தேசிய கீதம் பாடப்பெற்றது. சரியாக மாலை 4.30 மணியனாவில் கூட்டம் நிறைவு பெற்றது.

கூட்டத்தின் masters of Ceremony-களாக Lion C.ராஜன் (Tuticorin mid Team Lions Club) Lion S.இஜேத்திரபாபு, MJF (Tiruchuli Metro) Lion M.கிறிஸ்டோபர் (Tirunelveli Tower Lions Club) சிறப்பாக செயலாற்றினார்கள். சங்கரன்கோவில் லயன்ஸ் கிளப் புதுக்கடை லயன்ஸ் சாங்கமும் Maximum Registration Award வழங்கப்பட்டார்கள்.

இக்கூட்டத்தினை சிறப்பாக அமைத்துத் தந்த லயன் P.நல்லசிவம் பிள்ளை (புதுக்கடை லயன்ஸ் சங்கம்), மாவட்ட அமைச்சரவை செயலாளர் லயன் S.A.சுப்பையா, மாவட்ட

அமைச்சரவை பொருளாளர் லயன் ராஜ்குமார் (கோவில்பட்டி மிட்டவுண் லயன்ஸ் சங்கம்) லயன் அனில்குமார் (நட்டாலம் கிங்ஸ் லயன்ஸ் சங்கம்) பரிசுகள் வழங்கப்பட்டார்கள். பேனர் பிரசண்ட்டேஷனுக்கான சிறப்பு பரிசு R.C.லயன் ஜான்ரவி அவர்களின் மண்டலத்திற்கு வழங்கப்பட்டது.

நமது இந்த மாவட்ட மாநாட்டில் பெரிய யோசனைகளும், ஊக்கங்கரும் முதன்மை மேடையைத் தாண்டியும் நமக்கு கிடைக்கின்றது. சக லயன்ஸ் உறுப்பினர்கள் வழங்கிய வல்லுநர் அறிவுரைகளை, நாம் நமது சங்கத்திற்கு கொண்டு வந்து, அவற்றின் பயன்களை மேம்படுத்தலாம். நமது சொந்த லயன்ஸ் அனுபவத்தை இன்னும் சிறப்பாக்கலாம்.






34
District Convention
Hotel Viswa Grand, Kanyakumari
MURUGAN


Inaugural address




LIONS CLUB OF SIVAKASI
OUR VALUABLE SERVICES
LIONS CLUB
THE SIVAKASI LIONS INTERNATIONAL INSTITUTIONS



# பொதுக்குழுக் கூட்டம் (ஏப்ரல்)

